# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎ 416-282-8059    416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்



**வெளிவருகின்றது**

ஆகஸ்ட் 2002

உலக **தமிழோசை**

**காலாண்டு சஞ்சிகை**

தமிழ் வர்த்தக நிலையங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.



[illegible]தி 12    JULY 15, 2002    பாலம் 14




www.ilfenomeno.it





**வீடு விற்க, வாங்க...**

**Raja M. Mahendran, P. Eng.**
(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!


## அருள் விருந்து

* பிறர்க்கு ஏதேனும் ஒரு விதத்தில் தொண்டு புரி பிறர்க்குப் பணிவிடை செய்யாது வாழும் வாழ்வு வாழ்வல்ல.

* நீ உறுதி படைத்தவன் ஆகும் பொழுது உன்னை உடற்றும் கேடுகள் பல தாமே அழிந்துபட்டுப் போகின்றன.

* இவ்வுலகை விட்டு வெளியேறும் நாள் ஒன்று வருவது திண்ணம். இதை மனதில் வைத்திருப்பவன் வீண்காலம் போக்கமாட்டான்.

- செ. சிவசுப்பிரமணியம்


**Singapore Communication**

- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12noon - 1p.m) Free
- Refer a friend & Receive a Free Gift
- Add.Day time min 0.30cts only
- Ask.$50/M - U/L Incoming call

**Free Phone & $30.00 Plan***

• Call waiting, Conference Calling & Voice Mail Free
**Pl.Call: Sathi /Ashma**
**Store: 416.740.5292 Cell: 416.717.6302**
5010 Steeles Ave., W., Unit 17ABC - Kipling & Steeles



**சிவாகம கிரியா பீடம்**

**(416) 724-7480**

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

**சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

**416.267.8221**



**Insurance & Financial Services**

**Balan Kanapathi (Agent)**

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL.



London Life

**•416.321.1515 •905.294.2429**

**4433 Sheppard Ave. E. Suit 200,** (Brimley/Sheppard)



**VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ONT. M1B 5P9, CANADA**
**TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com**

# அறிவும் ஆக்கமும் 106

விஜய குலத்துங்கம்



சில காலங்களுக்கு முன்னர் செலூலர் போன் அல்லது கைத்தொலைபேசி உபயோகிப்பது கூடாது என்றும், அதிலிருந்து வரும் மின்காந்த கதிர்வீச்சு மூளையைப் பாதிக்கும் என்றும் கூறப்பட்டது. பின்னர் அது உண்மையல்ல எனக் கூறப்பட்டதால், அது பற்றி மேலும் பெரிதாகப் பேசப்படவில்லை. ஆனால் தற்போது மீண்டும் அது பற்றிய பேச்சு அடிபடத் தொடங்கியுள்ளது.

அண்மையில் Finlandஐச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் செய்த பரிசோதனையின் படி, கைத்தொலைபேசியில் இருந்து வரும் கதிர்வீச்சுகள் மூளையின் கலங்களைப் பாதிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. Finland இல் உள்ள Radiation and nuclear safety authority என்ற நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செய்த பரிசோதனைகளின் படி கைத் தொலைபேசியில் இருந்து வரும் மின்காந்த கதிர்வீச்சுக்களினால் மூளையிலுள்ள blood - brain - barrier என்னும் பகுதியைப் பாதிக்கின்றது எனக் கூறப்படுகின்றது. இந்தப் பகுதியானது இரத்தத்தினோடு மூளைக் கலங்களைப் பாதிக்கக் கூடிய பதார்த்தங்கள் செல்வதைத் தடுக்கின்றது. கைத்தொலை பேசியில் இருந்து வரும் கதிர்வீச்சுகள் இரத்தக் குழாய்களின் சுவர்களின் கலங்களைப் பாதிப்பதால் மூளைக் கலங்களுக்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் இரத்தத்துடன் மூளைக் கலங்களை அடைவதால் மூளை பாதிப்படைகின்றது.

இந்தப் பரிசோதனைகளில் பரிசோதனைக் கூடத்தில் மூளைக் கலங்களை வைத்து, அதில் ஏற்படும் பாதிப்புகள் ஆராயப்பட்டன. ஆனால் உயிருள்ள மனிதர்களில் இது பற்றி மேலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட வேண்டும் என இந்த ஆராய்ச்சியாளர்களின் தலைவரான பேராசிரியர் Darius Leszcynski என்பவர் கூறியுள்ளார். ஆனால் இதே நேரத்தில் விலங்குகளில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் இது பாதிப்பை விளைவிப்பதாக அறியப்பட்டுள்ளது. விலங்கு களில் முக்கியமாக எலிகளில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் அவற்றிற்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஒத்த பாதிப்புகள் மனிதரிலும் உண்டாகலாம் என சுவீடனில் செய்த ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இந்தப் பாதிப்புகள் மனிதரில் ஆரம்பத்தில் தலையிடி, களைப்பு, நித்திரைக் குழப்பம் ஆகியவற்றை உண்டாக்கி, பின்னர் Alzheimer போன்ற மறதி வியாதிகளை உண்டு பண்ணும் எனக் கூறப்படுகின்றது.

மின்காந்த கதிர்வீச்சுகளின் விளைவுகளை உடனடியாகக் காணப்பட முடியாது. பல வருடங்களின் பின்னர்தான் இதன் விளைவு களை வெளிப்படையாகக் காணமுடியும். கைத்தொலைபேசிப் பாவனை கடந்த சில வருடங்களாகத்தான் பரவலாக உபயோகிக்கப் பட ஆரம்பித்தது. எனவே விளைவுகளை இப்போது நாம் காணமுடியாது எனவும் கூறப்படுகின்றது. சில காலங்களின் முன்னர் கைத்தொலைபேசியினால் காதில் ஒரு வகைப் புற்றுநோய் உண்டாகும் எனக் கூறப்பட்டது. காதின் உட்பகுதியில் உண்டாகும் ஒரு Tumor அல்லது கட்டியினால் Acoustic Neuroma என்ற புற்றுநோய் உண்டாகும் எனக் கூறப்பட்டது. ஆனால் பின்னர் நியூயோர்கிலுள்ள வைத்திய பல்கலைக்கழகத்தில், இந்த வகைப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 90 பேர்களில் செய்யப்பட்ட பரிசோதனையில் இருந்து, கைத்தொலைபேசிக்கும் புற்றுநோய்க்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறப்பட்டது. கைத்தொலைபேசியில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சு காதைச் சுற்றியுள்ள தோலினாலும், எலும்புகளினாலும் மண்டையோட்டின் பகுதி களாலும் உறிஞ்சப்பட்டாலும், இதற்கும் புற்று நோய்க்கும் சம்பந்தம் இல்லையென முடிவு செய்யப்பட்டது.

ஜப்பானில் உள்ள Tohuku பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புகையிரத வண்டிகளில் ஒரு பரிசோதனை செய் தார்கள். புகையிரதத்தில் கைத்தொலைபேசியை ஒரு சிலர் உபயோகித்தால் கூட, சர்வதேச பாதுகாப்பு அளவுகளுக்கு மேலாக மின்காந்த கதிர்வீச்சுகளின் அளவு இருக்கும் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புகையிரதத்தினுள்ளே முற்றாக ஜன்னல் கதவுகள் எல்லாம் மூடப்பட்டு இருப்பதால், கைத்தொலைபேசியில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சு உள்ளேயே பட்டுத் தெறிப்பது உள்ளேயிருப்பவர்களை அது பலமுறை தாக்குகின்றது. 151 பேர் இருக்கும் ஒரு புகைவண்டியின் பகுதியில் 30 பேர் மாத்திரம் கைத்தொலைபேசிகளை உபயோகித் தாலும், international Committee for non-ionsing radiation என்ற சர்வதேச நியமங்களை உண்டாக்கும் நிறுவனத்தின் பாதுகாப்பு அளவுகளை விட கதிரியக்கம் கூடுதலாக இருக்கும் என அறியப்பட்டது. இதே மாதிரியான பாதிப்பு பேருந்து வண்டிகளிலும், elevator களிலும் கூட இருக்கும் என இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.
தைத்தொலைபேசிகளில் இருந்து மின்காந்த கதிரியிக்கம் வெளிப்படுகின்றது என்பது



உண்மை. ஆனால் இதன் பாதிப்பு நிச்சயமாக மனிதரில் இருக்கும் என்பதை இன்னும் திட்டவட்டமாக கூறுவதற்கு ஆராய்ச்சி முடிவுகள் மனிதரில் செய்யப்பட்டு அறியப்பட வில்லை. ஆனால் நிச்சயமாக ஒன்றும் தெரியாத நிலையில் நாம் சில முன்னெச்சரிக்கைகளை எடுப்பது நல்லது. கைத்தொலைபேசிகளில் சுருக்கமாக கதைத்து முடித்துக் கொள்ள வேண்டும். நீண்ட நேர அரட்டைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். Hands free எனப்படும் அமைப்புகளை உபயோகிக்க வேண்டும். கைத்தொலைபேசிகளை தலையின் அருகிலோ, உடலின் அருகிலோ வைக்காமல், காது ஒலி வாங்கியையும், ஒலிபெருக்கியையும் உபயோகித்து நாம் உரையாடல்களை நிகழ்த்த வேண்டும். முக்கியமாக வாகனம் ஓடும் போது இந்த அமைப்புகளினால் வாகன விபத்துகள் ஏற்படுவதையும் தடுக்கலாம்.

இதைவிட external Antenna என சொல்லப் படும் வயர் மூலம் இணைக்கப்பட்ட அன்டனாக்களை உபயோகிக்க வேண்டும். இந்த அன்டெனா மூலமாகத்தான் கதிரியக்கம் வெளிப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. எனவே கைத்தொலைபேசியில் antenna இல்லாமல் external antenna உள்ள கைத்தொலைபேசிகளை உபயோகிக்க வேண்டும். இதைவிட SAR எண் குறைவாக உள்ள கைத்தொலைபேசியில் கதிரியக்கம் குறைவாக இருப்பதால், அப்படியான கைத்தொலை பேசிகளை உபயோகிக்க வேண்டும். எதற்கும் அவசர தேவையின்றி கைத்தொலைப்பேசிகளை உபயோகிக்காமல் விடுவது நன்று.

• • • • • •

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?



**கவலையை விடுங்கள்**

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



**Vitaplex**

**சம்போ அன்ட் கன்டிஷனர்**

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

**கிடைக்கும் இட...**

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாக எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலு கிடைக்கின்றது.


**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**



**Introducing 1 Hour Photo Lab:**
3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
**416 - 750 - 8118**
2381 Eglinton Ave., E.
Kennedy / Eglinton, Scarborough

**NTE AUTO**

**New Trade Engineering INC.**



ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Condition Service & Repair**



**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

CONTACT: SIVABALAN - (416) 750-1573
151 NATUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT
IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCAR.

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN

Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## தமிழ் கனடிய தொழில்நுட்ப கண்காட்சி 2002

## ஒரு புதிய பரிணாமம்

**பங்குபற்றுவதற்கான அழைப்பு**

"Tamil Canadians embrace technology to power their future...." என்று வர்ணித்தது Toronto Star பத்திரிகை.

கடந்த ஆண்டில் நடைபெற்ற தமிழ் உயர் தொழில்நுட்ப கண்காட்சியின் வெற்றியானது கனடிய மக்களுக்கு தமிழ் மக்களின் வளர்ச்சியையும் கடின உழைப்பையும் எடுத்தியம்பியது. கடந்த 15 வருடங்களில், எவ்வளவு முன்னேறியுள்ளார்கள் என்பதை எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்வாகவும் இது அமைந்தது. எமது சமூகத்தின் முன்[illegible]ற்றத்தை அளக்கும் ஓர் அள[illegible]காலாக இத் தொழில்நுட்ப கண்காட்சி அமைகிறது.

புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கத்தோடு இவ்வருட கண்காட்சியானது எமது சமூகத்திற்கு பயன்படக் கூடிய சில புதிய விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். கண்காட்சியில் நடைபெறும் நிகழ்வுகளும் அதில் நீங்கள் எவ்வாறு பங்குபற்றலாம் போன்ற விபரங்கள் பின்வருமாறு:

1. வர்த்தக கண்காட்சி (Commercial Exhibits)
தொழில்நுட்ப துறையில் சேவை புரிவோரை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டும் நிகழ்வாக இது அமையும். இந்தக் கண்காட்சி biotechnology போன்ற தொழில்நுட்பங்களையும் உள்ளடக்கும்.

2. Engineering Desing Showcase ("our pioneering students") பல்கலைக்கழக மாணவர்களிற்காக:

பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் ப[illegible]rojects களை இந்த நிகழ்வில் காட்[illegible]து வைப்பதன் மூலம் அவற்றை சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்புகளை அறிந்து கொள்ளலாம்.

பங்குபற்றுவதற்கான விதிமுறைகள்:

* Projects தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை.

* ஒரு நாட்டின் அபிவிருத்தி சார்ந்து இருப்பின் அது வரவேற்கத்தக்கது.

* மாணவர்கள் தங்களது விபரங்களை சமர்ப்பிக்கும் முடிவு திகதி: ஆடி 20, 2002 (இந்நேரத்தில் விபரங்கள் மட்டுமே தேவை)

*மேலதிக விபரங்களுக்கு: info@teedor.ca

பாடசாலை மாணவர்களுக்காக:

மாணவர்கள் குழுவாக Lego Robotics போட்டியில் பங்குபற்றலாம். மாணவர்கள் மத்தியில் குழுவாக அறியும் ஆற்றலை வளர்ப்பதற்காக இப்போட்டி நடாத்தப்படுகிறது. மேலும் மட்டுப் படுத்தப்பட்ட கருவிகளைக் கொண்டு (lego) ஒரு engineering design ஐ செய்வதற்கு அவர்களைத் தயார்படுத்தவும் இப்போட்டி நடாத்தப்படுகின்றது.

பங்குபற்றுவதற்கான விதிகள்:

* ஒவ்வொரு குழுவும் குறைந்தது 3 மாணவர்களை கொண்டிருக்க வேண்டும்.

* Robot I Lego MindStorm System கொண்டே அமைக்க வேண்டும். (www.legomindstorms.com)

* ஒவ்வொரு குழுவும் தங்கள் robot எவ்வாறு இயங்க வேண்டும் என்ற விபரங்களை www.teedor.ca/expo2002/de.html என்ற முகவரியில் அறியலாம்.

* 12 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் விசேட பயிற்சிகளை செஞ்சோலை அமைப்பினூடாக பெறலாம். தொடர்புகளுக்கு: 416-???-????

3. தொழில்நுட்பரீதியான கலை வடிவங்கள் (Technology-based Art): தொழில்நுட்பத்தை பயன்படுத்தும் கலைஞர்கள் மற்றும் animator கள் தங்களின் திறமைகளை உலகிற்கு தெரியப்படுத்துவதற்காக இந்நிகழ்வு நடாத்தப்படுகிறது.

4. கருத்தரங்குகள்:

இதில் இரண்டு வகையான கருத்தரங்குகளும் உள்ளடங்கும்.

* தொழில்நுட்பம் சார்ந்த கருத்தரங்குகள்: தொழில்நுட்பம் சார்ந்த வியாபாரங்கள் எவ்வாறு ஆரம்பிப்பது முதல் பல்வேறு தொழில்நுட்பங்களைப் பற்றி அறிமுகப்படுத்துதல் இங்கே வழங்கப்படும்.

* அபிவிருத்தி சார்ந்த கருத்தரங்குகள்: எங்களில் பலர் தாயகத்திற்குச் சென்று அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி செய்துள்ளார்கள். இந்நிகழ்வானது நீங்கள் அங்கு செய்த உதவிகள் மற்றும் அங்கு பெற்ற அனுபவங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்தவும் அவர்களை இம்மாதிரியான திட்டங்களுக்கு உதவி செய்ய ஊக்கப்படுத்தவும் நடத்தப் படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு: info@teedor.ca
www.teedor.ca


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 132

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| | | 4 | ■ | 5 | | | |
| | ■ | | 6 | ■ | ■ | 7 | ■ |
| | ■ | 8 | | | | ■ | 9 |
| | ■ | | ■ | ■ | 10 | | |
| ■ | 11 | ■ | 12 | ■ | | ■ | |
| 13 | | | | | 14 | | ■ |

**இடமிருந்து - வலம்**

1. சுமாராக
4. நீர்நிலைஒன்று (வல - இட)
5. பல்லக்கு
6. விழி (வல - இட)
8. சிறு வட்டில்
10. நீக்கு
13. தமிழீழத்தின் ஓர் ஊர்

**மேலிருந்து - கீழ்**

1. பெற்றுக் கொள்
2. ஆசிரியர்
3. மகிழ்ச்சி
4. சதங்கை
6. இடம்
7. எடைக்கல் (கீழ் - மேல்)
9. தோற்றம்
11. அடிப்படை
12. தொடக்கம்
14. வேகம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ரி | யோ | த | ன | ன் | ■ | ■ |
| வ | தி | ■ | ண் | ■ | ■ | ர் | கா |
| ர் | ■ | ம் | ட | ட் | வ | ■ | ■ |
| ப் | ■ | ■ | வா | ■ | று | யி | ஞா |
| பு | த் | த | ள | ம் | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | ம் | ■ | னை | த | சோ |
| ரு | ■ | ன | ■ | ம | ■ | ■ | ள |
| எ | ஞ் | ஞா | ன் | று | ம் | ■ | ம் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JLYE 25, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**131இல் வெற்றி பெற்றோர்**
1) Mrs. Moorthi, Mississagua, Ont.
2) I. Tharany, Downtown, Ont.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.

* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**

# தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459**


**253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai**


வாழ்க்கையென்பது தூக்கமென்றால் காதல் அதன் கனவாகும்.

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



சென்ற மாதம் அதாவது ஆனிமாதத்தின் இறுதிப்பகுதியில் மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களது இறுதித்தவணை முடிவுகளை பெற்றதோடு வகுப்பு உயர்வுகளையும் பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை தரம் எட்டில் பயின்ற மாணவர்களிற்கான கனிஷ்ட பாடசாலைக்கான பட்டமளிப்பு விழாவும் சிறப்பாக நடைபெற்றிருந்தது. இவ்வாறான இச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில் சில மாணவர்கள் அதி சிறப்புப் புலமைக்கான விருதுகள் பெற்றமையும் இங்கே குறிப்பிடத்தக்க தொன்றாகும். இச் சிறப்புச் சான்றிதழ்கள் உண்மையில் பெரு மையுடன் வரவேற்கக்கூடிய மிகப் பெரியதோர் விடயமாகும். வெறுமனே புள்ளி அடிப்படையில் மட்டுமன்றி இன்னும் பல காரண காரியங்களையும் கவனத்தில் கொண்டு இப் புலமைச் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விடயம் சார்பாக பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் வடிப்பதும், மனம் நொந்து போவதும் அன்றைய தினத்திலேயே முற்று முழுதாக காணக்கூடியதாக இருக்கும். குறிப்பாக புலமைக் கேடயங்கள் பெறாத மாணவர்களின் பெற்றோர் இவ்விடயத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடுவர். எனவே இவ்வாறான தகைமைக்கு ஏதுவான மாணவர் களது பெற்றோர் அதாவது தரம் ஏழில் (Gr. 7)



சிறந்த முறையில் சான்றிதழ்கள் பெற்று தரம் எட்டுக்குத் தயாராக இருக்கும் மாணவர்களைக் குறிப்பிட்டு இந்த அதிவிசேட சான்றிதழ்களைப் பெறும் பொருட்டு கண்காணிப்பது முக்கியமான விடயமாகிறது. இதுவிடயம் சார்பாக, மாணவர்கள் எவ்வித அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர் என்கிற அனைத்து விபரங்களையும் சில பாடசாலைக்கு நேரில் சென்று ஒன்ராரியோ கல்வித் தகவல்களை வெளியிட இருக்கின்றேன். எனவே தற்சமயம் தரம் ஏழில் சராசரி ஏழும் அதற்கு மேலான எண்ணிக்கையில் "A"க்கள் எடுத்த மாணவர்களது விபரங்கள் எமக்கு கிடைப்பின் அம்மாணவர்களது பாடசாலைகளை தெரிவு செய்து இவ்வாறான தகவல்களை அப் பாடசாலைகளில் இருந்தே பெற்று வெளியிடுவேன்.

2002ஆம் ஆண்டில் இவ்வாறான புலமைச் சித்திகள் பெற்ற இரு மாணவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர்களில் செல்வி பிரபாகினி யோகநாதனைச் சந்தித்த போது இவருடைய திறமைகள் தரம் எட்டில் மாத்திரமின்றி பல்வேறு துறைகளிலும் இருந்தமை கண்டு வியந்து போனேன். வரிசையாக அடுக்கப்பட்டிருந்த கேடயங்களைப் பற்றி ஆய்ந்த போது தரம் 4, 5, 6 இவைகளில் தொடர்ச்சியாக Academic Award உம் (அனைத்து பாடங்களிலும் சிறப்புச் சித்திகள்) தரம் 6இல், மேலும் கணிதத்திற்கும் என்று சிறப்புச் சான்றிதழ்கள் கேடயங்கள் பெற்றதோடு, தொடர்ச்சியாக தரம் 7இல் History Awared உம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. தரம் 8இல் புலமைச் சிறப்பில் அனைத்துப் பாடங்களில் சிறப்புரிமை பெறும் வகையான Academic Award உம், பிரெஞ் மொழிப் பாடத்திற்கான Award உம் கிடைக்கப் பெற்றுள்ளார். இதைவிட தரம் 8இல் முதற் தவணையில் அதியுயர் சராசரிப் புள்ளியினை எய்திய மாணவராகவும் கணிதத்தில் சிறந்த மாணவராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் இரண்டாம் தவணையில் மீண்டும் அதியுயர் சராசரிப் புள்ளிக்கான சிறப்புகள் பெற்றமையும்

**சர்மா (சரவணபவ சர்மா)**

குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கல்வித்துறையோடு மாத்திரமின்றி பிறதுறைகளாக இசை, விளையாட்டு இவைகளிலும் ஈடுபாடும் பரிசில்களும் பெற்றுள்ளார். உலகத் தமிழர் இயக்கத்தால் நடாத்திய சிறுமியர்களுக்கான சதுரங்க (chess) ஆட்டத்தில் இரண்டாம் இடத்தையும் இவர் பெற்றுள்ளார்.


இம்மாணவியிடம் கேட்கப்பட்ட சிறு வினாக்களில், "மற்றைய மாணவர்கள் தன்னை விட அதிகம் புள்ளிகள் எடுக்கும் சந்தர்ப்பத்தில் தான் கவலைப்படுவதில்லை என்றும் எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வர வேண்டும் என்றும் பதில் அளித்தார். வீட்டில் பெற்றோரை மதிக்கும், சொல்வதைக் கேட்டு நடக்கும் பண்பையும் கொண்ட இந்த சிறந்த மாணவி செல்வி பிராபாகினி காணப்படுகிறார்.

தனது பாடசாலையில் (Dr. Marion Hilliard Senior Public School) இருந்து அவரது ஆசிரியர்களின் விசேட ஆலோசனையின் பேரில் சிறப்பு அனுமதி பெற்று தனது சிரேஸ்ட பாட-சாலைக் கல்வியைத் S.A.T.E.C.@Porter பாடசாலையில் தொடரவுள்ளார். அங்கு முற்று முழுவதாகக் கல்வியை கணினியின் அடிப்படையில் பயிலவுள்ளார். இவற்றை யெல்லாம் அமைதியாகக் கவனித்தபடி எங்களோடு அமர்ந்திருந்த பிரபாகினியின் தந்தையான சோதிடர் யோகநாதனை வேடிக்கையாக உங்கள் மகளைப் பற்றி சோதிடம் என்ன கூறுகிறது என்று கேட்டபோது சிரித்தபடி நான் தொழிலாக Life Insurance செய்து கொடுப்பதிலேயே நேரமாகிவிடுகிறது. அவர்களே கல்வியைப் பார்த்துக் கொள்கிறார்கள் என்று அமைதியாகவும் தற்பெருமை ஏதும் இன்றியும் பதில் அளித்தார். இதே பிரபாகினியன் சகோதரியான செல்வி தர்சினி தரம் 4இல் Academic Award எய்தியதோடு சகோதரியைப் போல் தரம் 8இல் சிறப்பு விருதுகள் பெறுவதை எதிர்



நோக்கியுள்ளேன் என்றும் பதிலளித்தார்.

அடுத்து, தரம் எட்டில் சிறப்புப் பரிசில்கள் பெற்றவரான செல்வன் சபீர் முக்தார். இவரைச் சந்தித்த போது அவரிடம் கூடக் கல்வித் துறையோடு மட்டும் நின்றுவிடாமல் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குவது புலனானது. தரம் 5இல் சதுரங்க விளையாட்டில் வெள்ளிக் கேடயம் (Silver Medal) பெற்றதோடு பாடசாலையில் பல்வேறு தொடர்ச்சியாக சதுரங்கத்தில் கவனமெடுத்து வருகிறார். தரம் ஆறில் (Gr.6) நீந்தும் பாடப் பயிற்சியில் சிறப்புச் சித்திகள் பெற்று உயிர்ப் பாதுகாவலர் (life guard) ஆகும் தகுதியினை கேடயத்துடன் பெற்றுள்ளார். இதோடு தரம் 6 இல் நடைபெ-பற்ற மரதன் ஓட்டப் போட்டியில் 20வது இடத்தையும் இவர் பெற்றுள்ளார். இதே மரதன் ஓட்டத்தில் தரம் 7இல் 15வது இடத்துக்கு வந்துள்ளார். மேலும் இதில் முன்னேறும் சவாலோடு பயிற்சிகள் மேற்கொள்ள இருக்கிறார். Birchmount Stadium இல் நடைபெறும் மைதான 800m ஓட்டப் போட்டியிலும் 6வது இடத்தில் வந்துள்ளார். இத்துடன் பாடசாலையில் அனைத்து பந்தாட்டங்களிலும் பங்குபற்றி யுள்ளார். இசைத் துறையிலும் Piano இல் Trophies எனும் சிறப்பு வெற்றிகளுடனும் தொடர்ந்து பயிலும் இவர் புல்லாங்குழல் வாசிப்பதிலும் சிறந்து விளங்குகிறார். இவ்வாறான பல திறமைகளைக் கொண்ட சபீர் முக்தார் Alexander Stirling



Public School இல் தரம் ஒன்றில் இருந்து தரம் 8 வரை பயின்றவர். தரம் எட்டில் அதி மதிப்பிற்குரிய Academic Award ஐயும் (அனைத்து பாடங்களிலும் மேன்மையுள்ள சித்தி), Science Award விஞ்ஞான பாடத்திற்கான) விசேட சித்திக்கு பெயர் பதித்த கேடயங்களைப் பெற்றுள்ளார். மேலும் தன்னை சிறப்பாக்கிய சபீர். எதிர்காலத்தில் வானியல் ஆய்வாளராக வரவேண்டும் என்றும் அது சார்பாக நிறைய புத்தகங்கள் படிப்பதும் செய்திகள் திரட்டுவதுமான நடவடிக்கைகளையும் தனது பொழுதுபோக்காகச் செய்து வருகிறார். தனது வெற்றிக்கு அறிகுறியாக விஞ்ஞான பாடத்தில் அதிவிசேட வெற்றியீட்டிய் சபீர் தனது எண்ணத்தை சாதிப்பார் என்பது திண்ணமே.

இம் மாணவர்களின் திறமையினையும் முயற்சியி னையும் மற்றைய பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு இந்த இளவயதில் தகுந்த முறையில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற உயர் நோக்கம் கருதி இம்முறை இக் கல்வித் தகவல் பகுதியினை அமைத்துள்ளேன்.

இது சார்பான பெற்றோரின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எமக்குத் தெரியப்படுத்து வதோடு இன்னும் தரம் எட்டில் சிறப்பு விருதுகள் பெற்ற மாணவர்களை அடுத்த கல்வித் தகவல் பகுதியில் சேர்த்து ஆர்வமாக்க வுள்ளோம் என்றும் தெரியப்படுத்திக் கொள் கிறேன்.


## திருமண சேவை

உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

**416 261-6219**

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME




## WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades




இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

**FREE ESTIMATE**

விபரங்களுக்கு:
என். செல்வம்
416.332.8482
416.419.9247
905.201.7733

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.


- கலகலப்பு தீசன்

# விண்வெளி

105

கனி



**அந்நியர்கள் - Aliens**

சென்ற தடவை Rosewell பகுதியில் வாழ்ந்த மக்கள் சிலர் அங்கு நடந்த விண் விபத்தின் பின்னர் மூன்று ஏலியன்களைக் கண்டதாகக் கூறினார்கள் என்பதைப் பற்றி எழுதியிருந்தேன் அல்லவா! அதுபற்றிய உங்களது கருத்துக் களைத் தொடர்ந்து . வரும் பகுதிகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

Ufologistகள் அமெரிக்க அரச அதிகாரிகளிடம் Rosewell பகுதி மக்கள் கூறிய Alien - ஏலியன் பற்றிக் கேட்ட பொழுது அவர்கள் முற்றாகவே மறுத்துவிட்டார்கள். ஏலியன்கள் ஏதும் அப்பகுதியில் இருக்கவில்லை. அவ்விபத்து வெறும் காலநிலையை அறியும் பலூன்களின் விபத்தே என்று உறுதியாகக் கூறிவிட்டார்கள். அக்காலநிலையை அறியும் பலூன்களின் சில பொம்மை மனிதர்களையே றொஸ்வெல் பகுதி மக்கள் கண்டிருக்கலாம் என்றும் பொம்மை மனிதர்களைப் பற்றி அறியாத கிராம வாசிகள் அந்தப் பொம்மை மனிதர்களைத்தான் ஏலியன்கள் எனத் தவறாகக் கருதியிருக்கலாம் எனக் கூறினார்கள். இவர்களது பதில் ஆராய்ச்சியாளர்களைத் திருப்தி செய்யவில்லை. பல ஓட்டைகள் இருப்பதைக் கண்டு கொண்டார்கள். காலநிலை அறியும் பலூன்களின் பொம்மை மனிதர்களுக்கு என்ன அவசியம் வந்தது? என்ற கேள்விக்கு அது இராணுவ இரகசியம் என்ற மாதிரிப் பதில் கொடுத்துச் சமாளித்துவிட்டார்கள். மேலும் குகை[illegible] வெளியேயுமாக நடந்து திரிந்த ஏலியன் பற்றி எதுவுமே கூறவில்லை. பொம்மை மனிதன் எனில் எப்படி நடந்து திரிந்திருக்க முடியும்? இந்தக் கேள்விக்கு எதுவித பதிலுமே இன்று வரையில்லை. ஆக ஆராய்ச்சியாளர்கள் தமது ஆய்வுகளை விரிவுபடுத்தத் தொடங்க பல ஆச்சரியமான செய்திகள் அவர்களுக்கு - உறுதிப்படுத்தப்படாமல் - கிடைத்தன.

முதலில் இந்த விபத்துப் பற்றிய முழு அறிக்கையும் அடங்கிய file ஆனது Blue Book எனப்பட்டு மூடி வைக்கப்பட்டு விட்டது. எனவே அந்த பைல் ஆனது திறந்து அதன் விபரங்கள் ஏதும் அறிப்பட முடியாது என்ற நிலைக்கு வந்துவிட்டது. எனவே இப்போது கிடைக்கும் தகவல்கள் எல்லாம் உறுதிப்படுத்தப்படாத - நம்பகத் தன்மை குறைந்த அல்லது இல்லாத தகவல்களாகவே கருதப்படும்.

Rosewell பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்கள் எல்லாமுமே Area 51 என்ற இரகசிய இராணுவப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டது. அச்சமயம் சில உயர்மட்ட வைத்திய அதிகாரிகள் Area 51 பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்களில் சிலர் தாம் வித்தியாசமான சில உயிரினங்களை அங்கு கண்டதாகவும் அவற்றிற்கு அவர்கள் வைத்திய உதவிகள் செய்ததாகவும் கூறினார்கள். மேலும் அவ் வுயிரினங்கள் இருந்த அறையைச் சுத்தம் செய்த நபர் ஒருவரும் இவர்களது கூற்றை ஆமோதிப்பது போல் கூறியிருந்தார். அச்சுறுத்தலின் காரணமாக இவர்கள் தங்களை இனம் காட்டவில்லை.

இந்த Area 51 என்பது மிகவும் பாதுகாப்பான இராணுவப் பகுதி. புறமனிதர் எவருமோ உள்ளே செல்லவோ அல்லது உள்ளே சென்று வெளியே வரவோ முடியாத பகுதி. மிகுந்த கட்டுப்பாடுடைய இப்பகுதியை மிகவும் தொலைவில் நின்று இன்றும் கூட பல ஆய்வாளர்கள் அவதானித்துக் கொண்டு இருக்கிறார்கள். அடிக்கடி இப்பகுதியில் இரவில் இனம் தெரியாத பறக்கும் பொருட்கள் நட மாடுவதை இந்த ஆய்வாளர்கள் கண்டு உள்ளார்கள். அமெரிக்க அரசாங்கம் இவ்விதமான ஒரு இடத்தை ஏன் வைத்திருக் கின்றாகள் என்று சில அமெரிக்க பிரஜைகள் கேள்வி எழுப்பிய போதும் கூட பதில் ஏதும் இன்றி இந்த Area 51 மௌனமாக அமெரிக்கப் பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து கொண்டு இருக்கின்றது. இத்தகைய உயர் பாதுகாப்பும் இரகசியம் கொண்ட இப்பகுதியால் பலர் பலவிதமான ஊகங்களைக் கூறுகின்றார்கள். சுவாரியமான அவ் ஊகங்களை அடுத்தமுறை பார்ப்போம்.

அறிந்து கொள்ளுங்கள்

- ☼ முஸ்லீம் நாடுகளில் மிகப் பெரிய நாடு - இந்தோனேஷியா.
- ☼ தென்கிழக்கு ஆசியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் நாடு - பிலிப்பைன்ஸ்.
- ☼ பர்மா - லாவோஸ் - தாய்லாந்து ஆகிய நாடுகளின் எல்லைகளில் விலை மதிக்க முடியாத போதைப் பொருள்கள் கடத்தப்படுவதால் அதைத் தங்க முக்கோணம் என்று அழைக்கப்படுகிறது.
- ☼ மத்திய ஸைபீரியாவில் உள்ள பைகால் ஏரி (Baikal) தான் உலகிலேயே மிக ஆழமான ஏரியாகும். அதன் ஆழம் 2,122 மீட்டர்.




பூட்டு? சாவி?

KEERTH LOGSMITH

வீடு-வியாபாரம்-தொழிலகம்

வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவிதமான பூட்டு, சாவி சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய இலக்கம்.

(416) 439-3709


Pager: (416) 375-7330

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்

விருது பெற்ற

VIVEKA PRINTERS

உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்



முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்

80 BARBADOS BLVD.,
UNIT #4 SCAR., ONT.

416-410-6401



# அன்புத் தமிழ்



## மாசறு பொன்னே!

புகார் நகரம் உலகம் புகழும் உன்னதமான ஒரு சர்வதேசத் துறைமுகம். புதுப்புது நாடுகள் எல்லாம் ஒன்றுகூடி வந்தாற் போன்று பல நாட்டுப் பண்டங்கள் பலவற்றைக் கொண்டு பொலிந்து விளங்கியது அது. அதன் செல்வச் சிறப்புக்குக் காரணமானவர் வணிகர். வணிகச் செல்வர்கள் குலமரபிற் குறைவுபடாத பண்புடையவர்களாகத் திகழ்ந்தனர். அத்தகைய செல்வச் சிறப்பும் பண்புச் சிறப்பும் . உள்ள குலத்திலே தோன்றியவர்தாம் துருவ நட்சத்திரம் போன்ற கண்ணகியும் அவளது காதற் கணவன் கோவலனும்.

அவர்கள் இருவரும் தமது ஏழடுக்கு மாளிகையின் நான்காவது மாடியில் அழகிய வேலைப்பாடுகளோடு கூடிய மணிக்கால்களைக் கொண்ட கட்டிலிலே மகிழ்ந்திருந்தனர். அவ்வேளை பலவகை மலர்களையும் தேடி, மகரந்தங்களை உண்டு மயங்கிய வண்டுகளுடன் இனிய தென்றல் சாரளத்தின் ஊடாக வந்து அவர்களைத் தழுவியது. உள்ளங்கள் காதல் வயப்பட, தமது மாளிகையின் நிலா முற்றத்துக்கு ஏறிச் சென்றனர். அங்கிருந்த கட்டிலின் மீது அவர்கள் இருவரும் ஒன்றாக இருந்த காட்சி ஞாயிறும் திங்களும் ஒருங்கே கூடியிருந்ததைப் போலக் காணப்பட்டது.

அவர்கள் ஒருவரையொருவர் தழுவினர். அவன் மார்பை அணிசெய்த தாரும் அவள் மார்பிலே விளங்கிய மாலையும் தம்முள் கலந்து மயங்கின. தழுவிய கைகளைச் சற்றே விலக்கி ஆராத காதலுடன் தன் மனைவியின் மதி முகத்தினைக் கோவலன் நோக்கினான். அவளது அழகிலிருந்து ஊற்றெடுக்கத் தொடங்கியது அவனது அன்புத் தமிழ்.

**கவிஞர். வி. கந்தவனம்**

'சிவபெருமானின் சடையிலிருக்கும் அழகிய பிறைத் திங்களை உன் நெற்றியில் காண்கிறேன். காமனின் ஒப்பற்ற கரும்பு வில்லினை உன்கரிய இரு புருவங்களில் காண்கிறேன். இந்திரன் தனது வச்சிரப்படையை உனது இடையாகுமாறு செய்தானா, என்ன? முருகப் பெருமான் என்னுடன் போர் செய்வதற்கு எவ்வித காரணமும் இல்லை. ஆனால் அவன் தன் வேலினை உனக்குக் கண்களாக தந்து என்னுடன் போர் செய்ய வைத்தது ஏன்?

'நீல மயில் உன் சாயலுக்குத் தோற்றுக் கானகம் சென்றுவிட்டதையும் அன்னம் உனது மென்னடையைக் கண்டு நாணித் தாமரைத் தடாகத்தில் ஒளிந்து கொண்டதையும் நீ அறிவாயா? மாதரசியே, சிறிய பசுங்கிளி உன்னைவிட்டு அகலாது இருப்பதன் காரணம் யாது தெரியுமா? உனது இனிமையான பேச்சினை கேட்டுத் தானும் உன்னைப் போலப் பேசப் பழக வேண்டும் என்பதற்காகவே உன் மலர்க் கையைவிட்டுப் பிரியாது உன் வாயிதழ்களைப் பார்த்த வண்ணம் இருக்கின்றது.

நறுமலர்க் கோதையே, உனது அழகைப் போற்றும் உனது ஏவல் மகளிர், குறைவில்லாத கொள்ளை அழகு இயற்கையாகவே உனக்கு இருக்கவும், ஏராளமான அணிகலன்கள் வேறு அணிந்துள்ளனரே! எதற்காக? அடர்த்தியான உனது கூந்தலில் ஒருசில மலர்கள் வைத்தாற் போதாதா? இதழ் விரிந்த மாலைகளையும் சூட்டியிருக்கின்றனரே! அவர்களுக்கு என்னதான் ஆயிற்று? அகிற்புகை வாசனையைக் கூந்தலுக்கு ஊட்டுதல் நல்லதுதான். ஆனால் கத்தூரிச் சாந்தையும் தடவியுள்ளனரே. ஏன் ? அழகிய உனது முலைத் தடங்களின் மீது சந்தனக் கோலம் போட்டதோடு நின்றுவிடாது, ஒற்றைவட முத்து மாலையும் அல்லவோ அணிந்துள்ளனர்! உனது மதி முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அரும்பவும் உனது சிறிய இடை ஒடிந்துவிடுவதுபோல வருந்தவும் இவ்விதம் எல்லாம் ஏன் செய்தார்கள்? அவர்களுக்கு நேர்ந்ததுதான் என்ன?

மாசறு பொன்னே வலம்புரி முத்தே  
காசறு விரையே கரும்பே தேனே  
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே  
பெருங்குடி வணிகன் பெருமட மகனே  
மலையிடைப் பிறவா மணியே என்கோ  
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ  
யாழிடைப் பிறவா இசையே என்கோ  
தாழ் இருங் கூந்தல் தையால் நின்னை!'

என்றெல்லாம் மலர்மாலையை அணிந்த கோவலன் அளவில்லாத கட்டுரைகள் பலவற்றால் தனது மனைவியின் அழகைப் பாராட்டி, அவளோடு கூடி இன்ப வெள்ளத்தில் திளைத்தான்.

கண்ணகி அறநெறியாளரைப் பேணுவதிலும் விருந்து ஓம்புவதிலும் வல்லவள். அவள் தனது கணவனோடு இல்லறம் நடத்திப் பலவகைச் செல்வங்களுடன் சிறப்புற்று வாழ்வதைக் காண விரும்பினாள். பண்பு மிக்கக் கோவலனின் தாயார். அவர்கள் சகல வசதிகளுடனும் தனிக் குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தாள். தம்பதிகளும் அவ்விதமே தனிமனை புகுந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டனர்.

கண்ணகி - கோவலன் இன்ப வாழ்க்கையை இளங்கோவடிகள் இவ்விதம் தொகுத்துக் கூறுகின்றார்:

தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தாலென ஒருவார்  
காமர் மனைவியெனக் கைகலந்து - நாமம்  
தொலையாத இன்பமெல்லாம் துன்னினார் மண்மேல்  
நிலையாமை கண்டவர்போல் நின்று.

'வாழ்க்கை நிலையாமையை உணர்ந்தவர்கள் போல, கோவலனும் கண்ணகியும் பாம்புகள் ஒன்றையொன்று பிணைந்து இன்பம் துய்ப்பது போலவும் காமனும் இரதியும் ஒருவரையொருவர் தழுவிக் கலப்பது போலவும் கூடி மகிழ்ந்து வாழ்க்கையின் இன்பங்கள் யாவற்றையும் இடையறாது அனுபவித்து வாழ்ந்து வந்தனர்.'

### தெரிந்து கொள்ளுங்கள்


* செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவர் - ஹென்றி டிரன்ட்.
* சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்தவர் - பேடன் பவுல்
* தென்துருவத்தை அடைந்த முதல் மனிதர் - அமுத்னென்
* வடதுருவத்தை அடைந்த முதல் மனிதர் - ராபர்ட் பியரி.
* சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கியவர் - தாமஸ் கிரேனர்.



ACTION HONDA

புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service





Call me Now!! 416-704-1179

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough




"THE MORTGAGE KILLER"..... FINANCIAL EQUALIZATION SINCE 1987

- significantly reduce your monthly debt load
- Increase your monthly cash flow ($200-$ 500 plus)
- Dramatically pay down your mortgage
- Accelerate your equity 3 - 4 times faster
- Provide a lump sum for personal use
- provide a six moth mortgage payment holiday
- provide a two - ear property tax payment holiday

All with NO up-front fees, out-of-pocket expenditure or increase in your present debt payment obligations. GUARANTEED! You must QUALIFY

| Example: | Before | After |
|---|---|---|
| Monthly payment obligation | $1,648 | $1,148 |
| Mortgage payment | $805 | $747 |
| Payment on monthly debts | $843 | $00 |
| Total interest-all debts | $122,607 | $78094 |
| Monthly cash flow increase | $00 | $500 |
| Lump sum cash | $00 | $10,000 |
| Years left to pay mortgage | $23.5 | $16.5 |
| Total savings & cash advantage | $00 | $142,174 |

(Specific benefits resulting from the program will differ in each case)

call us to find out about our other services:
- Tax credit program
- Tax deferred program
- Money management and wealth management programs

Call: Tony Fernando 416-292-4696
email: tfernando@fsginc.ca

SISTER FATIMA

Spiritual Psychic Advisor
Palm Card, Crystal Ball, Psychicreadings, Also Holistic Healer And Adcisor
God gifted healer with the power strength, and knowledge to help you overcome all your problems such as:
* Love * Health * Marriage / Divorce * Separation
* Bad Luck, Evill influence *Infertility * Lucky day & Numbers
* House Blessings * Removing Black Magic
SATISFACTION GUARANTEED
416-264-5836 (Eglintion & Markham Area, Scar.)



Mahesh Bhattஉம் Anand Patwardhan உம்

இந்தியாவில் சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே இருந்து தொடரும் மதக் கலவரங்கள், பற்றிப் பல குறும் படங்கள், திரைப் படங்கள் வெளிவந்துள்ளன, வந்து கொண்டிருக்கிறன்றன. எனக்கு நினைவில் நிற்பவை சில- 'In The Name of God' ஆனந்த் பட்வர்த்தன் இயக்கிய குறும்படம். Bombay - மணிரத்தினத்தால் எடுக்கப்பட்ட தவறான படம் Earth - தீமா மேத்தாவால் இயக்கப்பட்டது. இவற்றுடன் சில வருடங்களுக்கு முன்பு மகேஷ் பட் இயக்கிய Zakhm, இவ்வருடம் பெரும் சர்ச்சைகளை எழுப்பியுள்ள War and Peace - ஆனந்த் பட்வர்த்தன் - நெறியாள்கை செய்த குறும் படத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனந்த் பட்வர்த்தன்

In The Name of God என்னும் குறும்படத்தை இயக்கியவர். இப்படம் Toronto Film Festival இல் திரையிடப்பட்டு, விருதும் பெற்றது. அயோத்தியில் நடைபெற்ற இந்து, முஸ்லீம் கலவரங்கள் பற்றி இவர் மக்கள் மூலமாக கருத்துக்களை வெளிப்படுத்தினார். கல வரங்களில் ஈடுபட்ட பலருக்கு தாம் ஏன் மற்றைய மதத்தவரை தாக்குகிறோம் என்பது கூடத் தெளிவாகத் தெரியாது என வெளிப்படுத்தினார். நான் யார்? என்ற கேள்விக்கு ஒருவர் கூறுகிறார், நான் முதலில் இந்து, பின்னர் உயர்சாதி, அதன் பின்னர் இன்னாரது பரம்பரை, இறுதியாக மனிதன் அடையாளங்களுக்குள் மனிதம் அழிந்து விட்டது என்று அடித்துக் கூறினார். இவர் எடுத்துள்ள குறும்படமே War and Peace. எல்லைக்கு இடையிலான போர் பற்றியும் அணு ஆயுத அழிவு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ள இந்த குறும்படம் இவ்வருடம் Toronto Film Festival இல் திரையிடப்பட உள்ளது. இப் படத்துக்கு எதிராக இந்தியத் தணிக்கைக் குழுவினர் பின்வரும் கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

## வானரன்

* தலித்தலைவர் கூறியுள்ள கருத்துக்கள் தவிர்க்கப்பட வேண்டும். படத்தில் அவர் புத்தரின் ஒரு பெயர் இராணுவ குறியீடாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

* இப் படத்தில் தலித் பாடல் ஒன்று காந்தியை ஒரு பிராமணர் கொன்றதாகக் கூறுகிறது.

* சீனா எமது அடுத்த எதிரியாகலாம்.

* பிரதம மந்திரி மற்றும் மந்திரிகள் கூறிய கருத்துக்கள் அழிக்கப்பட வேண்டும்.

இப்படம் மகாத்மா காந்தியின் கருத்துக்களுடன் தொடங்கி, அக்கருத்துக்களுடனேயே முடிகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் இவ்வருட Festival ஐ தவறவிடாதீர்கள்.

Zakhm

பாலுமகேந்திரா தமிழில் இயக்கிய 'மறுபடியும்' திரைப்படத்தின் சொந்தக்காரர் மகேஷ் பட். இவர் இந்தியில் Arth என்று எடுத்த படமே பின்னர் மறுபடியானது. இதைத் தவிர Naam, Sanaansh, Sadak, Kaash போன்ற சிறந்த படங்களை நெறியாள்கை செய்தவர். நடுநிலைச் சினிமாவில் குறிப்பிடத்தக்க இயக்குனர்களுள் ஒருவர் மகேஷ் பட்.

இசையமைப்பாளர் Ajay Devgan அவரது மனைவி சோனாலி பிந்ரே. மற்றும் தம்பி Akshay ஆனந்தத்துடன் வாழ்ந்து வருகிறார். பம்பாயில் மதக்கலவரம் வெடிக்கிறது. Church இற்கு சென்ற தாய் முஸ்லீம்களால் படுகாயத்துக்கு உள்ளாக்கப்படுகிறார். தம்பி ஆனந்த் இந்து தீவிர கட்சியின் தீவிர உறுப்பினர். (இவர்களது தாய் ஒரு இந்து திரைப்படத் தயாரிப்பாளரிடம் தன்னை இழக்கிறார். அதில் முதலில் பிறந்தது இசையமைப்பாளர், பின்னர் ஆனந்த். தந்தை நாக்ர்ஜுனா பின்னர் வேறு ஒருவரைத் திருமணம் செய்து இவர்களை விட்டுவிடுகிறார்.)

தாய் அடிபட்டதைக் கேள்விப்பட்ட தம்பி கொதித்து எழுகிறார். முஸ்லீம்களை கொல்ல வேண்டும் என, தமையன் ஆறுதல் படுத்துகிறார். முடியவில்லை. இதற்குள் இந்து தீவிரவாதக் கட்சித் தலைவர் தாய் இறக்க வேண்டும் அதுவே எமக்கு நல்லது போராட்டம் நடத்தலாம் என பொலிஸிடம் கூறுகிறார். அதை செய்யவும் செய்கிறார். பிரேதத்தை பறிக்க முற்படுகிறன்றனர். தமையன் தம்பியிடம் கூறுகிறான் அம்மா ஒரு முஸ்லீம். எனவே நீ முஸ்லீம்களை அடிப்பதை விட்டு விடு என. கட்சித் தலைவர் இது வெளியே தெரியக் கூடாது என்பதில் தீவிரமாகவுள்ளார்.

இப்படத்தில் கூறப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் பல. அவற்றுள் ஒன்று தாய் அடிக்கடி Church இற்கு சென்று பிரார்த்தனை செய்வது. கனடிய வாழ் இந்து தமிழ் மக்கள் பலர் Montreal இல் உள்ள St. Josheph Church இற்கு சென்று பிரார்த்தனை செய்கின்றனர்.

மணிரத்திரனத்தை போல் குழப்பிவிடாமல் தெளிவாகத் தனது கருத்துக்களை கூறியுள்ளார்.

1. எவ்வாறு கட்சித் தலைமைகள் தொண்டர்களை பயன்படுத்துகின்றனர்.

2. உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

3. மதம் என்பது மக்களை நல்வழிப் படுத்துவதே.

4. அடையாளங்கள் என்பது வெறும் மாயையே. பிறப்பால் இந்து, திருமணத்தால் முஸ்லீம், வாழும் இடத்தால் கனடியர், வாழ்ந்த இடத்தால் இந்தியர், மரணத்தால் - சவம். மனிதம் எங்கே?

இப்படத்தை Markham & Ellesmere Taxedo Court உள்ள N.N. Video இல் பெற்றுக் கொள்ளலாம்.

### வியக்கும் அதிசய உண்மைகள்

1. சுண்செலியின் இதயம் நிமிடத்துக்கு எத்தனை தடவை துடிக்கிறது?
300 தடவை துடிக்கிறது. மனிதனின் இதயம் 72 தடவை துடிக்கிறது.

2. சிங்கப்பூர் துறைமுகத்தில் 1988 இல் எத்தனை கப்பல்கள் வந்து சென்றுள்ளன?
36,000 கப்பல்கள்

3. உலகிலே மரமே முறைக்காத ஒரே பகுதி எது தெரியுமா?
அண்டார்டிக்கா

4. 1610ஆம் ஆண்டு அமெரிக்காவின் மக்கள் தொகை எவ்வளவு?
310 பேர்

5. நாய்களைவிடப் பலமடங்கு மோப்பசக்தி கொண்ட உயிரினம் எது?
விலாங்கு மீன்

6. இங்கிலாந்து அரசர்களுள் மிகவும் அழகானவர் என்று கருதப்பட்டவர் யார்?
நான்காம் எட்வர்ட் அரசர்தான். இவரது உயரம் ஆறு அடி.

- திருமதி. R. பாலேந்திரா


UNITED PERSONAL INJURY ASSOCIATES

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES

The Car Accident People

ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

உங்களுக்குத் தெரியுமா?

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

விபத்து உங்கள் தவறானாலும் கூட

உங்களால் $172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

தீபன் - 416-505-9804

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 75 Collier St., Unit A, Barrie
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main St. East, 1st Floor, Hamilton

YOGA CLASSES

For Natural Cure Health & Peace of Mind

Raji (Ellango) "Yoga Bhooshna"
(Certified Yoga Instructor)

(416) 743-8173

Fax: (416) 743-8392
78 Riverdale Dr., Etobicoke Ont. M9V 2T7



தமிழில் இலவச சேவைகள்!!!


ரொறன்ரோவில் உள்ள பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம் பின்வரும் சேவைகளை தமிழில் வழங்குகின்றது.

* குடிவரவாளர்களுக்கு வேண்டிய உதவி:
  நிரந்தர குடியுரிமைப் பத்திரம் பெறும் வழிமுறைகள்.
  குடும்பத்தினரைப் பொறுப்பேற்றல்.
* இலவச ஆங்கில வகுப்புகள் - (கணினியுடன்) நிலைகள்: 1 - 2 -3 - 4 - 5
* சமூகநல, குடும்பநல உதவி பெறுவோர்க்கான உதவியை செய்தல்.
* தொழில், மற்றும் உயர்கல்வி சம்பந்தமான ஆலோசனை வழங்குதல்.
* சுகாதாரம், சட்டம், வீட்டு வசதி போன்ற துறைகளில் ஆலோசனை வழங்குதல்.
* மொழி பெயர்த்தல் மற்றும் விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல்.
* மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அங்கத்தினருக்கு வேண்டிய உதவிகள்.

மேலதிக விபரங்களுக்கு: சியாமளாவுடன் 416-261-4901 / 416-261-1380

என்ற இலக்கங்களில் பின்வரும் சேவை நேரங்களில் தொடர்புகொள்ளவும்:
செவ்வாய் முதல் வெள்ளி வரை: காலை 9:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை

**எங்கள் அலுவலக முகவரி:**
பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம்
(Polycultural Immigrant & Community Service)
3178 எக்லிண்டன் அவென்யு கிழக்கு #206 (முதல் மாடியில்)
(மார்க்கம் & எக்லிண்டன் சந்திப்பு)



## விளையாட்டுத் தகவல்கள் - 103

# 2002 உலககிண்ண இறுதி கண்ணோட்டம்

# உதைபந்தாட்டம்



மழை அடித்து ஓய்ந்த மாதிரி கடந்த ஒரு மாதமாக நடைபெற்று முடிந்த உலககிண்ணப் போட்டிகள் ஒரு முடிவிற்கு வந்துள்ளன. யார் வெல்லுவார் என்று "Magi Number 3964" அறிமுகப்படுத்திய பெருமை "விளம்பரம்" பத்திரிகையைச் சாரும் "விளம்பரம்" பத்திரிகையின் கணிப்பின்படி பிரேசில் வெற்றி பெற்றது.



Brazilian soccer players Ronaldo (L) and Cafu hoist the FIFA World Cup trophy during their victory parade through the streets of the capital Brasilia, July2, 2002.

Brazil defeated Germany 2-0 in teh World Cup final in Japan to capture an unprecedented fifth title. REUTERS / Mariana Bazo

17வது தடவையாக நடைபெற்ற உலககிண்ண போட்டிகளில் இதுவரை வட அமெரிக்க நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும் மட்டுமே, ஆக மொத்தமாக இதுவரை 7 நாடுகள் மட்டுமே வெற்றி ஈட்டியுள்ளன. ஆசிய நாடான கொரியா உலககிண்ண சரித்திரத்தில் முதல் தடவையாக அரை இறுதியாட்டத்தில் பங்கு பற்றியது ஆசிய மக்களுக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

பிரேசில் 5 தடவைகளும் (2002, 1994, 1970, 1962, 1958), ஜேர்மனி 3 தடவைகளும், இத்தாலி 3 தடவைகளும், உருகுவே இரண்டு தடவைகளும், ஆர்ஜென்ரினா 2 தடவைகளும், பிரான்ஸ் இங்கிலாந்து தலா ஒரு தடவைகளும் மட்டுமே வென்று உள்ளன.

48 வருடங்களின் பின்பு உலககிண்ணப் போட்டிக்கு தேறிய துருக்கி அணி யாவரும் எதிர்பார்க்காத வகையில் திறமையாக விளையாடி அரை இறுதியாட்டத்திற்கு தேறியது. இம்முறை புதிய அணியான செனகல் அணியும், ஆசிய அணியான ஜப்பான் அணியும் கால் இறுதியாட்டம் வரை முன்னேறியது வரவேற்கத் தக்கது. 2002இன் உலக சம்பியன் ஆக பிரேசிலும், Runners - up ஆக ஜேர்மனியும் மூன்றாம் இடமாக துருக்கி அணியும் வெற்றி ஈட்டினர். 32 நாடுகள் இறுதிச் சுற்றிற்கு தேறி 64 ஆட்டங்கள் ஆடப்பட்டு மொத்தமாக 64 ஆட்டங்களிலும் 161 கோல்கள் போடப்பட்டன.

Golden Shose Award என்று வர்ணிக்கப்படும் இவ்விருது அதிகூடிய கோல்கள் அடித்தவருக்கு வழங்கப்படும். இம்முறை 8 கோல்களை அடித்த Ronaldo விற்கு முதல் இடமும், 5 கோல்களை அடித்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த Klose இக்கு இரண்டாம் இடமும், 5 கோல்களை அடித்த பிரேசில் நாட்டைச் சேர்ந்த Rivaldo இற்கு மூன்றாம் இடமும் விருதுகள் வழங்கப்பட்டன. கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் இவ்விருது 1998ஆம் ஆண்டு குரோசியா நாட்டைச் சேர்ந்த Sukerஇற்கும், 1994ஆம் ஆண்டு ரஷ்யா நாட்டைச் சேர்ந்த Salenko இற்கும் புல்காரியா நாட்டைச் சேர்ந்த Stoichkov இற்கும் சேர்ந்து வழங்கப்பட்டது. 1970ஆம் ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த Muller இற்கு வழங்கப்பட்டது. இவர் அடித்த கோல்களின் எண்ணிக்கை 10 ஆகும். ஆனால் உலக கிண்ணப் போட்டிகளில் அதிகூடிய கோல்களை அடித்தவர் என்ற சாதனையில் முன்னணியில் திகழ்பவர் 1958ஆம் ஆண்டு பிரான்ஸ் அணியைச் சேர்ந்த Fontaine (13 கோல்கள்) என்ற வீரரேயாகும். Most Entertaining Team Award என்ற இந்த விருது கொரியா அணிக்கு வழங்கப்பட்டது. இந்த விருது பார்வையாளர்களை அதிக அளவு மகிழ்வித்த அணி என்ற ரீதியில் வழங்கப்படுகின்றது. இதுவும் தொலைத்தொடர்பு சாதனங்களின் வாக்குப் பதிவு மூலமே வழங்கப்படுகின்றது.

Golden Ball Award என்று வர்ணிக்கப்படும் மிகவும் பெறுமதிவாய்ந்த வீரருக்கு கொடுக்கப்படும் இவ்விருது (Most Valuble Player) இம்முறை ஜேர்மன் அணியின் கோல் காப்பாளரும், அணித் தலைவருமான ஒலிவர் கான் இற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது சகல தொலைத் தொடர்பு சாதனங்களின் கருத்துக் கணிப்பீட்டின் மூலம் வழங்கப்படும். Golden Ball - Oliver Kahn (ஜேர்மனி), Silver Ball - Ronaldo (பிரேசில்), Bronze Ball - Myung-bo (கொரியா) ஆகியோருக்கு வழங்கப்பட்டது. கடந்த உலக கிண்ணப் போட்டிகளில் 1998 - Ronaldo (பிரேசில்), 1994 - Romario (பிரேசில்), 1990 - Schillaci (இத்தாலி), 1986 - Maradona (ஆர்ஜென்ரினா), 1982 - Polo Rossi (இத்தாலி) ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



Germany's goal-keeper Oliver Kahn has been named as teh best player of the 2002 World Cup. REUTERS / Kai Pfaffenbach

Fair Play Award என்ற விருது இம்முறை பெல்ஜியம் அணிக்கு வழங்கப்பட்டது. இறுதிச் சுற்று ஆட்டங்களில் குறைவான மஞ்சள், சிவப்பு அட்டைகள் பெற்ற அணிக்கு வழங்கப்படும் விருதாகும்.

**எஸ். கணேஷ்**

2006ஆம் ஆண்டு உலககிண்ணப் போட்டிகள் ஜேர்மனியில் நடைபெற உள்ளது யாவரும் அறிந்ததே. இங்கு சில இறுதித் தரவுகளையும் பார்ப்போம்.

### கோல்களின் வித்தியாசம் / நாடு

Goal Differential

| Team | GF | GA | +/- |
|---|---|---|---|
| BRA (பிரேசில்) | 18 | 4 | +14 |
| GER (ஜேர்மனி) | 14 | 3 | +11 |
| ESP (ஸ்பெயின்) | 10 | 5 | +5 |
| TUR (துருக்கி) | 10 | 6 | +4 |

### கோல் அடிக்க உதவி புரிந்தவர்கள்

Assists leaders

| | |
|---|---|
| Ballack Michael (ஜேர்மனி) | 4 |
| Ziege Christian (இத்தாலி) | 3 |
| De Pedro (ஸ்பெயின்) | 3 |

### சிவப்பு / மஞ்சள் அட்டைகள் / நாடு

Team Yellow cards / Red cards

| Team | YC | RC |
|---|---|---|
| TUR (துருக்கி) | 19 | 2 |
| GER (ஜேர்மனி) | 18 | 1 |
| SEN (செனகல்) | 14 | 1 |
| PAR (பரகுவே) | 11 | 2 |

### விகிதாசாரம் / அடித்த கோல்கள் / ஆட்டம்

Team goals per game

| Team | GF | Avg. |
|---|---|---|
| BRA (பிரேசில்) | 18 | 2.6 |
| ESP (ஸ்பெயின்) | 10 | 2.0 |
| GER (ஜேர்மனி) | 14 | 2.0 |
| POR (போர்த்துக்கல்) | 6 | 2.0 |

*விளம்பரம் நடத்திய உலக உதைபந்தாட்டப் போட்டி 2002 போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.*

*1. Q Deellia* *2. S. புவனேந்திரன்* *3. N. Uma*

### உலகப் பழமொழிகள்

* தர்மம் செய்தல் ஒரு போதும் வறுமையடையாது; திருடுதல் ஒரு போதும் செல்வம் சேர்க்காது, செல்வச் செழிப்பு ஒரு போதும் அறிவாகிவிட முடியாது. - பிரிட்டிஷ் தீவுகள் பழமொழி

* உன் தோள் மேல் அமர்ந்திருப்பவன் அடிக்கடி உன் தலை மேல் அமர முயற்சி செய்வான். - டேனிஷ் பழமொழி


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.

**தமிழர் நிர்வாகத்தில் ஒரு**

**EMBASSY**



**விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது ஆனால்**

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944
5 SAMOSA -
$1.00

Embassy அமைந்துள்ள இடம்: Finch / Middlefield
5200 Finch Ave., Sacarborough
**416-332-8451**



# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

## பெண்ணின் உடல் பருமல் குறைய

(மருத்துவமுறை யோகாசனம்)

'விளம்பரம்' பத்திரிகையின் பெண் வாசகர்களே இன்று பெரும்பாலான பெண்களுக்கு உடல் பருமல் ஏற்படுவதற்கு முக்கியமான காரணம் அவர்களது உடலுக்குரிய வேலைகள் குறைவாக இருப்பதே. அதனால்தான் பொதுவாக அ[illegible]மான பெண்களுக்கு உடல் பருமல் உ[illegible]வாகின்றது.

இதில் பெண்களுக்கு முதலில் வயிறு, இடுப்பு, துடைகள், கால்பகுதி என்பன முதலில் பருமலாக வருகிறது. பின்பு நாளடைவில் கைகள், மார்பு, தோள்பட்டை பகுதிகளில் சதைகள் அதிகரிக்கும். அத்துடன் வயிற்றுப் பகுதியில் கொழுப்பு அதிகம் சேர்ந்து வயிறு பெரிதாகத் தோற்றமளிக்கும். இதைத் தொடர்ந்து முகமும் பருத்து உருண்டையாகக் காட்சியளிக்கும். அதாவது பெண்களின் உடலில் சேரும் சத்துகள் கொழுப்பாக மாறி உடலில் ஆங்காங்கே சதைகள் சேர்ந்து பெரிய அவயவங்களாக உருமாறுகின்றது. இவ்வாறு உடல் பருமலாக உள்ள பெண்கள் சிறிது வேலைகள் செய்தாலோ சொற்ப தூரம் நடந்தாலோ மூச்சு வாங்கும். உடல் சோர்வை உண்டாக்கும் இந்த நேரத்தில் இவர்கள் நினைப்பார்கள் முன்பெல்லாம் எவ்வளவு கஷ்டமில்லாமல் போய் வந்தோம். இப்போது ஒன்றுமே செய்ய முடியவில்லை என்று வருத்தப்படுவார்கள்.

இப்படியாக இவர்களின் சிரமத்திற்கு முக்கியமான காரணம் அவர்களின் உடல் உழைப்பு வேலைகள் மிகவும் குறைவாக இருந்தமைதான். இதனைச் சீர்செய்வதற்குத் த[illegible] மருத்துவ முறையிலான யோகாசனப் ப[illegible]கள் எவ்வாறு பயனளிக்கிறது என்பதை மூன்று பிரிவுகளாகப் பார்க்கலாம்.

முதல் பிரிவு: உடல் பருமலில் துடை, கால்கள், அடிவயிறு பகுதிகளிலுள்ள சதைகளைக் குறைக்கும் ஆசனங்கள்.

இரண்டாவது: உடல் பருமலில் மேல் வயிறு, இடுப்பு, முதுகு, தோள்பட்டை, மார்பு பகுதிகளிலுள்ள சதையைக் குறைக்கும் ஆசனங்கள்.

மூன்றாவது பிரிவு: உடல் பருமலால் உருவாகும் இரத்த அழுத்த நோய், நீரிழிவு நோய், மலச்சிக்கல், வாய்வு, ஆஸ்துமா போன்ற நோய்கள்.

இவைகள் வராமல் தடுக்கும் ஆசனங்கள் பற்றி மேற்கண்ட மூன்று பிரிவுகளின் அடிப்படையில் பார்ப்போம்.

முதல்பிரிவு:
உடல் பருமலாக உள்ள பெண்களுக்கு அதிக சிரமம் தரக்கூடியது துடை பருமலாக இருப்பதுதான். அடி வயிறு ஊதிப் பெரியதாக இருப்பதும் முக்கிய பிரச்சினையாகும். இந்த ப் [illegible]திகள் பெரிதாக இருப்பதால் நடக்க [illegible]ாது. காரணம் துடைகள் ஒன்றுடன் ஒன்று உ[illegible]ய்வதுதான். அடிவயிறு பெரிதாக இருப்பதால் படிகளிலோ, மேட்டுப் பாங்கான இடங்களில் ஏறுவதற்கு இயலாது. காரணம் கால்களைத் தூக்கிப் படியில் வைக்கும் போது அடிவயிறு துடையில் இடிக்கும். அதனால் படிகளில் ஏறமுடியாது. தரையில் உட்கார முடியாது. நாற்காலியில்தான் உட்கார முடியும்.

அடுத்து குனியவும் முடியாத நிலை ஏற்படும்.

இப்படிப்பட்ட உடல் அமைப்பைக் கொண்ட பெண்கள் தினந்தோறும் குறைந்தது 15 நிமிடங்களாவது சில முக்கியமான ஆசனங்களைச் செய்து வரவேண்டும்.


கால், துடை பகுதிகளுக்குப் பயன்தரும் ஆசனம்
1. பட்சிமொத்தாசனம் (Forward Bend)
2. தநூராசனம் (Bow)
3. சக்கராசனம் (Wheel)

அடிவயிறு சார்ந்த பகுதிகளை நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்குச் செய்ய வேண்டிய ஆசனம்
1. ஹலாசனம் (Plow)
2. சர்வாங்காசனம் (Shoulderstand)
3. யோகமுத்ரா (Yoga Motta)

மேற்குறிப்பிட்ட ஆசனங்களை ஆரம்பத்தில் ஒரு யோக ஆசிரியரின் உதவியுடன் பழகி வந்து மூன்று நான்கு மாதங்களில் ஒரு குறிப்பிடத்தக்க பலனை நிச்சயமாக அடைமுடியும்.



பட்சிமொத்தாசனம் (Forward Bend)



தநூராசனம் (Bow)



சக்கராசனம் (Wheel)



ஹலாசனம் (Plow)



சர்வாங்காசனம் (Shoulderstand)

# தேசிய சொத்துக்கள்

நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சி இன்று சுகாதார மருத்துவ துறையை அதி உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது எனின் மிகையாகாது. இதனால் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 20 - 30 வயது வரை ஆயுட்காலம் இருந்த நிலை மாற்றமடைந்து இன்று 70 - 100 வயதுவரை ஆயுட்காலம் அதிகரித்துச் சென்றுள்ளது. இதனால் இன்று சமூகம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக முதியோர் கருதப்படுகின்றனர். இன்றைய முதியோர் நேற்றைய சமூகத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு வித்திட்டவர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது. "படித்துத் தெளிவதிலும் பட்டுத் தெளிவது பயிச்சி வழி அனுபவத் தொழில்" இதுவே அதன் நம்பகத் தன்மையினை ஏற்படுத்தி விடுவதை உணர்கின்றோம். அனுபவ ஆசான்களின் கூற்று எமக்கு ஆறுதல் கொடுக்கும் சிகிச்சையாக உள்ளது. அதனால் தான் கூட்டுக் குடும்ப வாழ்வியலில் முதுமை அனுபவம் மிகவும் மதிக்கப்பட்டது. இதனால் முதியோரே ஒரு நாட்டின் தேசிய சொத்தாவார். எனவே இவர்களைப் புறக்கணிக்காது பேணிப் பாதுகாக்க வேண்டியது சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமை எனில் மிகையாகாது.

இன்று உலகில் முதியோர்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள். ஒருவரின் வாழ்க்கைச் சக்கரத்தில் குழந்தைப் பருவம், சிறுவர் பருவம், விடலைப் பருவம், வாலிப பருவம், முதுமைப் பருவம் என மாறி மாறி சுழல் சக்கரமாக அமைகிறது. இதில் முதுமைப் பருவம் என பருவமாகும். 160 கோடி மக்களுடன் அடி எடுத்து வைத்த இந் நூற்றாண்டு 600 கோடி மக்களுடன் விடை பெற்று 21ஆம் நூற்றாண்டில் நுழைந்துள்ளது. விருத்தி அடைந்த நாடுகளில் மட்டுமல்லாது விருத்தி அடைந்து வரும் நாடுகளில் கூட சுகாதார மருத்துவ விருத்தி பல மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சமூகத்தில் முதியோர் தொகை அதிகரித்துள்ளது. வயோதிபர் அல்லது முதியோர் என்பதற்கு பல்வேறு வரை விலக்கணங்கள் கூறப்பட்ட போதும் 1982ஆம் ஆண்டில் World Assembly on Aging இன்படி 60 வயதுக்கு மேற்பட்டோரே முதியோர் எனக் கூறப்பட்டது. எனினும் 65 வயதுக்கு மேற்பட்டோரே முதியோர் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை ஒக்ரோபர் 01 ஆம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதன் நோக்கம் சுதந்திரம், கவனம் சுய பூர்த்தி மகத்துவம் போன்றவற்றை முதியோரிடம் பேணுதலாகும். "இலங்கையில் முதியோர் தொடர்பான பாதுகாப்புச் சட்டம்" இல.09 2000ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி தொடக்கம் சட்டமாக நிறை வேற்றப்பட்டது. இச்சட்டத்தை அமுல் படுத்தும் பொறுப்பு சமூகசேவை திணைக் களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்று கணிசமான அளவ அதிகரித்துள்ள முதியோர் தொகை 2025இல் 15% அதி கரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

